**செய்தி வெளியீடு எண்:612** **நாள்: 23.12.2016**

**நிதி (வழிவகைகள்–II)த் துறை,**
**செய்தி வெளியீடு, நாள் டிசம்பர் 23, 2016**

மொத்தம் **ரூபாய் 1500.00 கோடி** மதிப்புள்ள பங்குகள் வடிவிலான **10 ஆண்டு** கால பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் **டிசம்பர் 27, 2016** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.00 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution(E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **டிசம்பர் 27, 2016** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

க. சண்முகம்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை–9.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**